# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 117/2017 | அரசு தரப்பு | அ.சா.3 |
| பெயர் | அப்துல் லத்தீப் | தாலூக்கா | |
| தகப்பனார் பெயர் | | வயது | |
| கிராமம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 5th day of November 2025.

**(** எதிரி அனூப் மேத்யூ ஜார்ஜ் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்**)**

முதல் விசாரணை

நான் தற்பொழுது மருந்தகம் வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 2012 முதல் 2015 வரை எஸ்.எம்.பார்மஸி என்ற பெயரில் கதவு எண்.129, கே.எம்.காம்ப்ளக்ஸ், பாலக்காடு ரோடு, பொள்ளாச்சி என்ற முகவரியில் மருந்தகம் நடத்தி வந்தேன். அந்த தருணத்தில் டாடா டொக்கோமோ என்ற நிறுவனத்திற்காக அதன் சிம்கார்டுகளை வினியோகஸ்தர் என்ற முறையில் விற்பனை செய்து வந்தேன். கடந்த 2016 ஆம் ஆண்டில் பொள்ளாச்சி காவல் நிலையத்திலிருந்து ஒரு காவல் அதிகாரி வந்து ஒரு சிம்கார்டு விற்றுள்ள ஒரு முகவரியை காட்டி வேலுமணி என்ற பெயரில் சிம்கார்டு வாங்கப்பட்டுள்ளதாகவும், அதை யார் வாங்கியது என்ற விவரத்தை என்னிடம் கேட்டார். நான் அப்பொழுது யாராவது ஒருவர் சிம்கார்டு வந்து கேட்டால் அவரது முகவரி குறித்த ஆதரவை காட்டினால் நாங்கள் வழங்கிவிடுவோம் என்றும், அப்போது பயோ மெட்ரிக் முறை இல்லை என்றும் சொன்னேன். அப்பொழுது ஒரு நபரின் போட்டோவை காட்டி இவரை ஞாபகம் உள்ளதா என்று கேட்டார். எனக்கு சரியாக ஞாபகமில்லை, பார்த்தும்,

பார்க்காததுபோல் உள்ளது என்று நான் அடையாத்தைச் சொன்னேன். அது சம்மந்தமாக ஒரு நெம்பரை சொல்லி சிம்கார்டு பொறுத்து கேட்டார்கள். தற்போது அந்த எண் எனக்கு ஞாபகமில்லை. ஆனால் அது குறித்த விவரங்களை நான் அவரிடம் கூறினேன். எனக்கு அதைத்தவிர வேறு விவரங்கள் எதுவும் இந்த வழக்கை பற்றி தெரியாது.

(இந்நிலையில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்குரைஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோருகிறார். குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது. )

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை விசாரணை

கடந்த 2013 ஆம் வருடம் மார்ச் மாதத்தில் எனது கடைக்கு கேரள மாநிலத்தை சேர்ந்தவர் போல் இருந்த ஒரு நபர் தனக்கு ஒரு சிம்கார்டு வேண்டுமென்றும், அதற்காக வேலுமணி என்ற பெண்ணின் வாக்காளர் அடையாள அட்டையின் நகலையும், ஒரு போட்டோவையும் கொடுத்து ஒரு சிம்கார்டு வாங்கி சென்றதாக போலீசார் விசாரணையின்பொழுது நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். செல் நெம்பர் 7200295266 டொக்கோமா சிம் என்றால் சரிதான். இது என்னால்தான் விற்கப்பட்டது. தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் Application form படிவம் எனது கடையில் எனது கடையில் பிராசஸ் செய்யப்பட்டதுதான். அது அ.த.சா.ஆ.**2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அ.த.சா.ஆ.2 புகைப்பட நகல் என்பதால் எதிரியின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) அந்த படிவத்தின்படி அதை வாங்கிய வாடிக்கையாளர் கையொப்பம் செய்துள்ளார். அந்த படிவத்தை யார் வாங்கி சென்றார்கள் என்ற விவரத்தை நான் போலீசார் விசாரணையின்பொழுது கூறினேன். அனூப் மேத்யூ

என்ற நபர் வாங்கி சென்றதாக நான் அப்பொழுது விசாரணையில் கூறினேன். அவர் இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்று தெரியவில்லை. காரணம் நீண்ட நாட்கள் ஆனதால் என்னால் எதிரியை அடையாளம் காட்ட முடியவில்லை. போலீசார் விசாரணையின்பொழுது " நான் மேற்படி படிவத்தை ஐ.டி Proof ஐ பார்த்து பூர்த்தி செய்து சிம்கார்டு கவரில் உள்ள இரண்டு ஸ்டிக்கர்களில் 15 இலக்கமிட்ட சிம்கார்டு எண்களின் ஒன்றை விண்ணப்ப படிவத்தில் ஒட்டியும், ஒன்றை கவருடன் அவரிடம் கொடுத்தேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேலும் போலீசார் விசாரணையின்பொழுது அந்த பார்மில் எனது கடையின் எஸ்.எம்.பார்மஸி என்ற சீலினை வைத்து மேற்படி சிம்கார்டை ஏக்டிவேஷன் செய்ய டாடா செல்லுலர் சர்வீசுக்கு அனுப்பி வைத்தேன் என்று நான் கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேலும் போலீசார் விசாரணையில் சிம்கார்டு சரியாக சேல்ஸ் ஆகாததால் அதன் விற்பனையை 2015 ஆம் வருடம் நவம்பர் மாதம் நிறுத்தி விட்டதாக நான் கூறினேன் என்றால், கம்பெனி நிறுத்தி விட்டதாக நான் கூறினேன். போலீசார் விசாரணையின்பொழுது என்னிடம் காட்டிய புகைப்படத்தில் இருந்த நபரை அடையாளம் காட்டி அவர் அனூப் சார்ஜ் என்றும், அவர்தான் வாங்கினார் என்றும் நான் கூறினேன் என்றால் சரிதான். போலீசார் வேலுமணி என்ற பெண்மணி கொடுத்த புகாரின் அடிப்படையில்தான் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். வேலுமணியின் விவரங்களை தவறாக பயன்படுத்தி சிம்கார்டு வாங்கப்பட்டுள்ளதாக நான் போலீசார் விசாரணையில் தெரிந்து கொண்டேன்.

<u>எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

**2012** லிருந்து **2015** வரை நான் சிம்கார்டு வியாபாரம் செய்து வந்தேன்**.** அந்த காலகட்டத்தில் சுமார் 1000 நபர்களுக்கு நான் சிம்கார்டு விற்று இருப்பேன் என்று சொன்னால், நிறைய நபர்களுக்கு விற்றேன். சிம்கார்டு வழங்குவதற்கு

முன்பு அடையாள ஆவணங்களை பெற்று கொண்டுதான் விற்பனை செய்வேன். சிம்கார்டு விற்பனை செய்யும்பொழுது சம்மந்தப்பட்ட நபர் நேரடியாக வந்து கேட்டால்தான் சிம்கார்டு கொடுக்கப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. தற்பொழுது அவ்வாறு விற்பனை செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்பவ காலத்தில் மற்றவர்களின் ஆவணங்களை வைத்து யார் வேண்டுமானாலும் சிம்கார்டுகளை பெற்று செல்வார்கள். நான் அரசு தரப்பு குறுக்கு விசாரணையின்பொழுது போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலம் சரி என்று சொல்வது போலீசார் சொல்லி கொடுத்து கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அ.த.சா.ஆ.2 என்னால் வழங்கப்பட்டதல்ல என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்/அப்துல் லத்தீப்,

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya
Principal District and Sessions Judge,
Coimbatore.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 117/2017 | அரசு தரப்பு | அ.சா.4 |
| பெயர் | மாரிமுத்து | தாலூக்கா | |
| தகப்பனார் பெயர் | | வயது | |
| கிராமம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 5th day of November 2025.

**(** எதிரி அனூப் மேத்யூ ஜார்ஜ் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்**)**

முதல் விசாரணை

நான் 17/30 தில்லையாடி வள்ளியம்மை தெரு, அடிவாரம், பழனி என்ற விலாசத்தில் குடியிருந்த வருகிறேன். நான் தற்பொழுது உடுலைப்பேட்டையில் பி.எஸ்.எஸ். மகளீர் குழுவில் கலெக்சன் ஏஜெண்டாக வேலை செய்து வருகிறேன். கடந்த 2014-2015 ஆண்டுகளில் பொள்ளாச்சி கிணத்துக்கடவு பகுதியில் கிராம சக்தி என்ற மகளீர் குழு நிறுவனத்தில் கலெக்சன் ஆபீசராக வேலை பார்த்தேன். எனது பணி கிராமத்தில் வசித்து வரும் நடுத்தர பெண்களுக்கு நிதி உதவி அளித்து அவர்கள் கால்நடை வாங்கிக் கொள்வதற்கு உதவிகரமாக இருக்கவேண்டும் என்ற நோக்கத்தில் அந்த பணியினை செய்து வந்தேன். நாங்கள் அவ்வாறு தேர்ந்தெடுக்கும்பொழுது சம்மந்தப்பட்ட பெண் விண்ணப்பதாரர்களின் ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, ரேஷன்கார்டு ஆகியவற்றை பெற்று, அதை அவர்களின் வீட்டிற்கே சென்று முகவரியை சரிபார்த்து லோன் வாங்கி கொடுப்போம்.

கடந்த 2016 ஆம் ஆண்டு பொள்ளாச்சி காவல் நிலையத்திலிருந்து இரண்டு அதிகாரிகள் வந்து வேலுமணி என்பவரிடம் அடையாள அட்டை வாங்கினீர்களா என்று கேட்டார்கள். ஆமாம், வாங்கினேன் என்று சொன்னேன். அந்த ஆதார் அட்டையை பயன்படுத்தி சிம்கார்டு வாங்கியுள்ளது உங்களுக்கு தெரியுமா என்று கேட்டார்கள். அதற்கு தெரியாது என்று நான் பதில் சொன்னேன். அவரின் ஆதார் நகலை யாரிடமாவது கொடுத்தீர்களா என்று கேட்டார்கள். அதற்கு நான் ஆமாம் என்று சொன்னேன். ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, ரேஷன்கார்டு ஆகியவற்றின் நகல்களை வடக்கிபாளையத்தை சேர்ந்த என்னைபோன்ற கலெக்சன் ஏஜெண்ட் அனூப் என்பவரிடம் கொடுத்தேன். அனூப்பை என்பவரது அறிமுகத்தின் அடிப்படையில் தானும் மகளீர் குழுவில் வேலை பார்ப்பதாகவும், வியாபார இலக்கை எட்டுவதற்காக தனக்கு தேவைப்படுவதாகவும், இந்த முறை எனக்கு கொடுங்கள், அடுத்த முறை உங்களுக்கு தருகிறேன் என்று சொன்னதன் அடிப்படையில் மேற்சொன்ன மூன்று ஆவணங்களையும் அவரிடம் கொடுத்தேன். மேற்சொன்ன விவரத்தை என்னை விசாரித்த போலீசாரிடம் நான் சொன்னேன். 10 வருடங்கள் ஆனதால் அனூப்பை என்னால் தற்பொழுது அடையாளம் காட்ட இயலாது. மேலும் போலீசார் விசாரித்தபொழுது நான் வழங்கியுள்ள ஆதாரங்களை வைத்து வேலுமணி என்ற பெயரில் சிம்கார்டு வாங்கியுள்ள விவரத்தை சொல்லியும், அவ்வாறு அவர் வாங்குவதற்கு நான் கொடுத்துள்ள ஆதாரங்களை பயன்படுத்தியுள்ளார்கள் என்றும் சொன்னார்கள். இவ்வாறு வாங்கியுள்ள சிம்கார்டுகளை மாவோயிஸ்டுகள் பயன்படுத்தி வருகிறார்கள் என்ற விவரத்தையும் போலீசார் சொன்னார்கள். இது சம்மந்தமாக வேறு எந்த தகவலும் எனக்கு தெரியாது என்ற விவரத்தை அவர்களிடம் நான் சொன்னேன்.

எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை

போலீசார் விசாரணையின்பொழுது என்னைபோன்று அடுத்த கம்பெனியில் வேலை செய்த நபரிடம் கொடுத்ததாக கூறினேன். அனூப் என்ற பெயரை போலீசார் சொல்லி கொடுத்துதான் நான் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கிராமசக்தி மகளீர் குழுவில் வேலை செய்தேன் என்று காட்டுவதற்கு போலீசார் என்னிடம் ஆவணங்கள் எதையும் பெற்று சென்றார்களா என்றால், இல்லை. நான் கிராம சக்தி மகளீர் குழுவில் ஒருபொழுதும் வேலை செய்யவில்லை என்றும், வேலுமணி என்ற நபரிடம் ஆவணங்கள் எதையும் பெறவில்லை என்றும், வேலுமணியின் ஆவண நகல்களை அனூப் என்பவரிடம் நான் கொடுக்கவில்லை என்றும், தற்பொழுது போலீசார் சொல்லி கொடுத்து தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

ஒம்/ மாரிமுத்து,

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya
Principal District and Sessions Judge,
Coimbatore.